313

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் எ	பிரசோற்பத்தி, கார்த்திகை.	மலர் அ

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார் தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக் குறிப்புரையும் மறுப்பும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி

(முற்றொடர்ச்சி. துணர். 7, பக்கம். 259.)

குறிப்பு 1. "உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே" என்னும் சூத்திரத்தால் உலகத்துப் பொருளையெல்லாம் உயர்திணைப்பொருள் அஃறிணைப்பொருளென இரண்டாகப்பகுத்துக் கோடலே ஆசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்தாமென்று, இ-வி-(சூ-'பொருண்முதல்') சூருவிளியுள் சிவஞானமுனிவர் கூறியது காண்க.

'சாதி வேற்றுமை கருதி, உலகப்பொருள்களையெல்லாம் உயர்திணை அஃறிணையென இரண்டு சாதியாக வகுத்து, அவ் வேற்றுமை கருதி அவற்றை ஐம்பாலாகப் பகுத்தலே எல்லாவாசிரியர்க்கும் கருத்தாம்' என்று 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என்னும் சூத்திரவுரையுள் சங்கரநமச்சிவாயர் கூறியதும் காண்க.'

(இக்குறிப்பு, 22-வது மறுப்பின் தொடர்ச்சியாக 66-வது பக்கத்தில் 5-வது வரியின் கீழ்ச் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.)

குறிப்பு 2. 'நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்' என்னும் கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தியுள்ளே, 'செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறல்' 'ஆக்கந்தானே காரணமுதற்றே' என்னும் விதிகள்பெற்று, ஞானமும் புகழும் உண்டாம் எனச் (செயற்கைப்பொருள்) ஆக்கமொடு கூறப்பட்டு, (சிலைபிராமன் தோள்வலி கூறுதலாகிய) காரண முதற்றாய் வந்தவாறு காண்க என அச்சிவஞானமுனிவர் கூறியவாறும் காண்க.'

(இக்குறிப்பு, 23-வது மறுப்புரையின் தொடர்ச்சியாக 71-வது பக்கத்தில் 12-வது வரியின் கீழ்ச் சேர்க்கப்படுதல் வேண்டும்.)

குறிப்பு 3. 'நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்' என்னும் கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தியுள்ளே 'வெற்றியையும் வெற்றிகொண்டார் சூடும் வாகைத்தொடையையும் உணர்த்திப் பலபொருள் ஒருசொல்லாய் நிற்கும் 'வாகை' யென்பது 'சூடிய' என்னும் வினையால் ஈண்டு மாலையை உணர்த்திற்று' என ஆசிரியர் சிவஞான முனிவர் இவ்விலக்கணம் விளங்க உரைத்தவாறு காண்க.'

(இக்குறிப்பு, 25-வது மறுப்புரையின் தொடர்ச்சியாக 85-வது பக்கத்தில் 10-வரியில், 'வழுவாதல் அறிக' என்பதன் பின் சேர்க்கப்படுவது.)

குறிப்பு 4. 'செல்வ வாரணம் கொடுத்தோன்.' 'திகழ் பொறிப் பீலி அணிமயில் கொடுத்தோன்.' 'இருங்கண்வெள் யாட் டெழின்மணி கொடுத்தோன்.' (பரிபாடல்-செய்-5) 'நாடுதிறை கொடுப்ப.' (பதிற்றுப்பத்து-53) என்புழி, இட வழுவமைதியென்று குறித்த உரையாசிரியர்கள், கொடுத்தல் வாய்பாட்டை யொழித்துத் தருதல் வாய்பாட்டில் உரையுட் கூறியது காண்க.

(இக்குறிப்பு 9-வது மறுப்புரையின் தொடர்ச்சியாக 15-வது பக்கத்தில் 23-வது வரியின் கீழ்ச்சேர்த்துக் கொள்ளப் படுவது.)

மறுப்பு 26

சூ. 1-குறிப்புரை.

'உயர்திணை' என்பது பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை யென்று சேனாவரையர் உரையுட் கண்டதாகக் குறிப்புரையாளர் எழுதினார்.

யாம் கண்ட சேனாவரையர் உரைப் புத்தகங்களுள் யாண்டும் அவ்வாறு கூறப்பட்டதைக்கண்டிலம். குறிப்புரையாளர் அவ்வாறு கூறப்பட்டதாகக் கண்ட சேனாவரையர் உரைதான் யாண்டையதோ?

மறுப்பு 27

(சூ. 1-குறிப்புரை.)

[சொல்லின் இலக்கணம்—தோல்காப்பியனார் பெயரியலிலே 'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே' என்றார். அஃதாவது போருள் குறித்தனவேல்லாம் சோல் என்பதாம்.] என்றார்.

மறுப்புரை :—ஆசிரியர் தோல்காப்பியனார் சொல்லின் இலக்கணம் இன்னது என்று உணர்த்தப் புகுந்தவர், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று சூத்திரம் ஓதினார். இதனால் 'சொல்லின் இயல்பாவது பொருள்குறித்து வருவது' என்பதே ஆசிரியர் கருத்து. பெயர்வினை இடை உரியென்னும் நால்வகைச்சொல்லும் பொருள் குறித்து வருவன என்பார் 'எல்லாச்சொல்லும்' என்றும், பொருள் குறியாதுவரும் சொல் இல்லையென்பார் 'பொருள் குறித்தனவே' எனத்தேற்றேகாரம் கொடுத்தும் கூறினார். ஆகவே 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்னும் சூத்திரக்கிடக்கை முறையே அமைவுடைத்தாம். அக்கிடக்கை முறையைக் குறிப்புரையாளர் புரட்டிப், 'போருள் குறித்தனவேல்லாம் சோல் என்பதாம்' என்றார்.

பொருள் குறித்தனவெல்லாம் சொல்லாம் என்றால்,-மூலித் தலையின்றிக் கல்லாலின் கீழமர்ந்த இறைவன் நிலையானது ஞானப்பொருளை உணர்த்திற்று. மதுரையில் மூங்கைப்பிள்ளையாகத்தோன்றிய உருத்திரசன்மர் பதந்தோறும் கண்ணீர் வார்ந்த நிலையானது, இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் உரைத்த உரையே மெய்யுரை என்னும் பொருண்மையை உணர்த்திற்று. கோயில்களிலும் வீட்டுச்சுவர்களிலும் படங்களிலும் எழுதப்பட்ட ஓவியங்கள் அவற்றோடு தொடர்புடைய பொருளைக்குறிக்கும். பள்ளிக்கூடங்களில் அடிக்கும் மணியொலியானது மாணுக்கரை அழைத்தலையேனும் புறப்படுத்துவதையேனும் குறிக்கும். கோயிலில் அடிக்கப்படும் மணியின் ஒலியானது இறைவனை இறைஞ்சுமின் என்னும் பொருள்குறிக்கும். புகைவண்டிச்சாலையில் அமைக்கப்பட்ட கைகாட்டிமரம் என்பது அவ்வண்டிகள் நிலையடிக்குள் வரலாமென்பதையேனும் வரலாகாதென்பதையேனும் குறிக்கும்; அதுவன்றி அதைவிட்டுப் புறப்படலாம் என்பதையேனும் புறப்படலாகாது என்பதையேனும் குறிக்கும். ஆகவே இவ்வாறு பொருள் குறிப்பனவெல்லாம் சொல்லாதல்வேண்டும். அவையெல்லாம் சொல்லெனப்படா. ஆகையால் 'பொருள் குறித்தனவெல்லாம் சொல் என்பதாம்' என்று குறிப்புரையாளர் கூறிய புதிய இலக்கணம் குற்றமுடைத்தாதல் அறிக.

அஃது எவ்வகைக் குற்றமோ எனின், 'பசுவெல்லாம் புல்லையே தின்னும்' என்பதனைப் 'புல்லைத் தின்பனவெல்லாம் பசுவே' எனவும், 'மாணுக்கரெல்லாம் பள்ளிக்கூடத்துக்குப் போவாரே' என்பதனைப் 'பள்ளிக்கூடத்துக்குப் போவாரெல்லாம் மாணுக்கரே' எனவும், 'முதலைகளெல்லாம் நீர் வாழ்வனவே' என்பதனை 'நீர்வாழ்வனவெல்லாம் முதலைகளே' எனவும் புரட்டியுரைத்தால் வரும்குற்றம் யாதோ அதுவேயாம் என்க.

'னஃகான் ஒற்றே ஆடூஉ வறிசொல்' என்னும் சூத்திரவுரையிலே, சேனாவரையர் 'ஆடூஉ வறி சொல்லாவது னஃகான் ஒற்றே' என்று மாற்றியுரைக்கவேண்டும் என்றார். அதனைக்

குறிப்புரையாளர் ஞாபகத்தில் வைத்துக்கொண்டதனாற்போலும், 'எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே' என்னும் சூத்திரப் பொருளைப் 'பொருள் குறித்தனவெல்லாம் சொல்லே' யென மாற்றியுரைத்தார். 'னஃகான் ஒற்றே ஆடூஉ வறிசொல்' என்னும் சூத்திரத்திலே விதியை ஏற்பது (குறிப்புரையாளர் கொள்கையின்படி உத்தேசியம் என்று சொல்லப்படுவது) ஆடூஉ வறிசொல் என்பதே. விதிக்கப்படுவது (விதேயம்) னஃகான் ஒற்று என்பதே. ஆகலின் அவ்விடத்தில் 'ஆடூஉ வறிசொல்லாவது னஃகான் ஒற்றே' என்பதே முறையாயிற்று. 'எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே' என்னும் சூத்திரத்திலோ, 'எல்லாச் சொல்லும்' என்பதே விதிபெறுவதாயும் 'பொருள் குறித்தனவே' என்பதே விதிக்கப் படுவதாகவும் உள்ளது. ஆகவே அச்சூத்திரக் கிடக்கைமுறையே முறையெனவும் அதனை மாற்றியுரைத்தது தவறெனவும் அறிக.

மறுப்பு 28.

(சூ. 1-குறிப்புரை.)

[தொல்காப்பியனார் பெயரியலிலே 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்றார். அஃதாவது 'பொருள் குறித்தனவெல்லாம் சொல் என்பதாம்.'

'ஆயின் குறிப்பின் உணர்த்தும் சைகையும் பொருள் குறிப்பதனால் அதன்கண் அதிவியாப்தி வருமோ என்று எண்ணி உரையாசிரியர், 'சொல் என்பது எழுத்தோடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை' என்றார். 'இங்ஙனம் இலக்கணம் கூறின், ஓரெழுத் தொருமொழியில் அவ்வியாப்தி வருமென்று நினைத்து 'எழுத்தொடு என்பதற்கு எழுத்தாதற்றன்மை யொடு' என்ற பொருளை உரையாசிரியர் கருதியிருக்க வேண்டு மென்று கூறிச் சேனாவரையர் 'சொல்லாவது எழுத்தோடு ஒரு புடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது' என்று சொல்லின் இலக்கணம் கூறினார்.] என்றார்

மறுப்புரை :—மேற்கூறியவாற்ருல் குறிப்புரையாளர் 'எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே' என்னும் தொல்காப்பியச்சூத்திரம் 'அதிவியாத்தி' 'அவ்வியாத்தி' என்னும் தோடமுடைத்தென்று கூறினுராயினுர். மேலும், ஆசிரியர் தொல்காப்பியனுர் தோடமுற இயற்றிய சூத்திரத்தை, உரையாசிரியர் திருத்தி உரைத்தார் என்றும் அவ்வுரையாசிரியர் தோடமுற உரைத்ததனைத் திருத்திச் சேனுவரையர் உரைத்தார் என்றும் குறிப்புரையாளர் குறித்தார். இதனுல் இக்குறிப்புரையாளர் தாம் இழைத்ததோடம் இன்னதென்று உணர்ந்தாரிலர் போலும்!

இக்குறிப்புரையாளர் தருக்க நூன்முறை இன்னது, இலக்கண நூன்முறை இன்னது என்று தெரிந்து கொண்டாரிலர். தருக்க நூலில் பயனிலைத் தொடரின் அமைப்பு இப்பெற்றியது, இலக்கண நூலில் சூத்திர வமைப்பு இப்பெற்றியது என்று தெரிந்து கொண்டாரும் இலர். தருக்க நூற் கொள்கைகளுக்கும் இலக்கண நூற் கொள்கைகளுக்கும் வேற்றுமை இன்னதென்று தெரிந்து கொண்டாருமிலர். தருக்க நூலையும் இலக்கண நூலையும் சேர்த்துக் குழப்பிவிட்டார். இலக்கணநூல் அமைதிக்கு ஏற்கும்அளவில் தருக்க நூற்கொள்கைகளைத் தழுவலாமேயன்றி, தருக்கநூற்கொள்கைகளுக்கு ஏற்ப இலக்கண நூல் அமையாது என்பதை உணரல்வேண்டும். தருக்க நூலிலே பயனிலைத் தொடர்களெல்லாம் சொற்களை நிறுத்துக் கொள்ளும். அங்கே மேற்கோளாகச் சொல்லப்படும் அவற்றிலே ஒருசொல் மிகுதலும் ஆகாது ; ஒருசொல் குறைதலும் ஆகாது. இலக்கண நூலிலோ, சொற்கள் மிகுதலும் உண்டு; குறைதலும் உண்டு. 'என்மனூர் புலவர்.' 'எழுத்தோரன்ன.' 'ஆயீரியல புணர்நிலைச்சுட்டே' என்ருற்போலும் சொற்ருெடர்கள் இலக்கண நூலில் பயில வழங்கும். 'வேண்டா கூறல்' என்னும் உத்தியின்பாற்பட்டு வேண்டியது விளக்கும் பல சொற்ருெடர்களும் பயிலவழங்கும். இவை தருக்கநூலில் தலைகாட்டா. உரையிற்கோடல், சிறப்புடைப்பொருளைத்தான் இனிது கிளத்தல், மொழிந்த பொருள்தோன்ற அவ்வயின்

மொழியாததனையும் முட்டின்றி முடித்தல், வந்ததுகொண்டு வாராததுணர்த்தல், உய்த்துக் கொண்டுணர்த்தல், ஒருதலை யன்மை-முதலிய உத்திகள் இலக்கண நூலிலே கொள்ளப்படுவன. இவற்றையெல்லாம் தருக்கநூல் ஏலாது. அரிமாநோக்கு முதலிய சூத்திரநிலைகளும், நிரைநிரை, கொண்டுகூட்டு முதலிப்பொருள் கோளும் இலக்கண நூலில் ஆளப்படுவன. இவை தருக்க நூலுக்கு அமையா. 'இம்மலைதீயுடைத்து' என மேற்கோளை முற்படக்கூறி, 'புகையுண்மையால்' என ஏதுவைப் பிற்படக் கூறி, 'அடுக்களைபோல' என எடுத்துக்காட்டை அதன்பிற் கூறுதல் தருக்கநூல் வழக்காறு. இலக்கணநூல் வழக்காற் றிற்கு அது முழுவதும் ஒத்துவாராது.

அவ்வாறே, தருக்க நூல் வழக்கிலே, 'ஆ இருகோடு உடைத்து எனின் யானைக்கும் பாட்டிற்கும் கோடுண்மை யால், இங்கே 'அதிவியாத்தி' என்னும் குற்றம் சாரும். ஆ கபிலநிறம் உடைத்து' என்றால், கபிலநிறம் உடையன சில வொழியப் பலவற்றிற்கு அவ்விலக்கணம் இன்மையால், இங்கே 'அவ்வியாத்தி' என்னும் குற்றம் சாரும். 'ஆ ஒற்றைக் குளம்புடையது' என்னின் ஆக்களெல்லாம் இரட்டைக் குளம்புடையனவே ஆதலால் 'அசம்பவம்' என்னும் குற்றம் சாரும். ஆதலால் இம்மூவகைக் குற்றமும் வாராமல் சொல்ல வேண்டும் என்பார் 'ஆ அலைதாடியை உடையது' என்பர். இப்பொழுதோ, ஒருசார் ஆடும் சேவற்கோழியும் தாடியுடைய வாதலால், அவ்விலக்கணமும் பழுதுடைத்து என்று அதனொடு கோடுடைமையும் கொள்வாருமுளர். இவ்வாறெல்லாம் தருக்க நூலிலே பயின்றதைக்கொண்டு, அந்நூல்முறைப்படியே தொல் காப்பியச் சூத்திரங்கள் யாக்கப்பட்டனவோ அல்லவோ என்று ஆராயப்புகின், **நெய்க்குத் தொன்னை ஆதாரமோ? தொன்னைக்கு நெய் ஆதாரமோ** என்று ஆராயப்புகுந்தான் ஒருவன், நெய்யைத் தரையில் ஊற்றிவிட்டு நெய்யையும் இழந்து தொன்னையையும் இழந்து ஏமாந்து பொழுதுபோக்கின கதையாகவே முடியும் என்க. இலக்கண நூலில் 'ஏற்புழிக்கோடல்' என்று எடுத் தாளப்படும் உத்தியானது, தருக்க நூலில் கொள்ளப்படும் 'அவ்வியாத்தி' என்னும் குற்றத்துக்கு முரணுவது அறிக.

அற்றேல்,

'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்.'

'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக் காலமொடு தோன்றும்.'

என்னும் சூத்திரவுரைகளிலே சேனவரையரும் அவ்வகைக் குற்றத்தை ஆராய்ந்துள்ளார் எனின், ஒருசில சூத்திரங்கள் அவ்வாறு ஆராய்தற்குரியனவாய் அமைந்தது, கிளிஞ்சில் எழுத்துப் போல்வதோர் விழுக்காடென்று ஒழிக.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் 'சொல்' என்பதன் இலக்கணத்தைக் குறையக் கூறினாருமல்லர். அதனை உரையாசிரியர்கள் நிரப்பினாரும் ஆகார். ஆசிரியர்,

'நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி.'
'குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே.'
'ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.' என்னும்

சூத்திரங்களால் எழுத்துக்களால் சொல்லாகுமாற்றை உணர்த்தினார்.

'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே' என்னும் சூத்திரத்தால் சொற்கள் பொருளுணர்த்துமாறு கூறினார்.

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்' என்பதனால்

சொல்லானது தன்னையுணர நிற்றலும் கூறினார்.

'தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற்றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே' என்பதனால்

சொற்கள் வெளிப்படை குறிப்பென்னும் இரண்டுவகையால் பொருள் விளங்கச் செய்தலைக் கூறினார்.

'சொல்லெனப்படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே.'

'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப.' என்பதனுல் சொற்கள் நான்குவகைப்படுமாறு கூறினுர்.

'இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே.' என்பதனுல் செய்யுள் வழக்குச் சொற்களைக் கூறினுர்.

'தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.'

'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னுகிய உயர்சொற் கிளவி.' என்பதனுல் சொற்கள் வழக்கில் வருமாறு கூறினுர்.

'உயர்திணை யென்மனுர் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனுர் அவரல பிறவே.'

'இருதிணைப் பிரிந்த ஐம்பாற்கிளவிக்கும்'

முதலிய சூத்திரங்களால் இருதிணைப் பாகுபாடும், ஐம்பாற் பாகுபாடும் கூறினுர்.

'தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தான்.' என்பதனுல் இடம் உணர்த்தினுர்.

'மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவே றிசைப்பினும்
எழுத்தியல் திரியா தென்மனுர் புலவர்.'

'ஆயிருதிணையினும் இசைக்குமன சொல்லே.' என்பதனுல் எழுத்து என்பதும், எழுத்தினுல் ஆக்கப்பட்டுப் பொருள் குறித்துவரும்சொல் என்பதும், ஓசையேயாம் என்பது கூறினுர்.

எனவே, ஆசிரியர் தொல்காப்பியனுர் விரிந்த நூல் இயற்றினுர் ஆகலின், அவர் சொல்லின் பலபடியான இலக்கணங்களை யெல்லாம் பலசூத்திரங்களிலே ஓதினுர். சுருங்க நூல் செய்த பவணந்தியார் என்பார் அவ்விலக்கணங்களை யெல்லாம் ஒருசேரத் திரட்டி,

'மொழிமுதற் காரண மாம்அணுத் திரளொலி
எழுத்து' எனவும்

'ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்று
இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.' எனவும்

சூத்திரம் ஓதினர். ஆகவே ஆசிரியர் தொல்காப்பியனார் சொல் என்பது பற்றிக் கூறிய இலக்கணங்களையே உரையாசிரியர்களுள் ஒருவர் சிறிது சுருக்கியும் ஒருவர் விரித்தும் உரைத்தாரென அறிக. சுருக்கியதைப் பெருக்குதற்கு இலக்கணநூலில் உத்தி வகை உள ஆதலால் இங்கே அதிவியாத்திவேண்டா அவ்வியாத்தியும் வேண்டாவென்க.

மறுப்பு. 29

(சூ. 1. குறிப்புரை)

'பொருள் குறித்தன வெல்லாம் சொல் என்பதாம்' என்பது குறிப்புரையாளர் குறித்த 'மேற்கோள்' உரை. அவர் மேலே, 'குறிப்பின் உணர்த்தும் சைகையும் பொருள் குறிப்பதனால்' என்று எடுத்துக் கொண்டு பரிகாரவுரை கூறப் புகுந்தார். 'பொருள் குறித்தன வெல்லாம் சொல்.' என்று முடித்துக் கொண்டவர், பின்னே சைகையும் பொருள் குறிக்கும் என்றது, 'தான் எடுத்துக் கொண்ட மேற்கோளுக்கு மறுதலைப்படப் பேசுதல்' என்னும் தோல்வித்தானமாக முடியும். இத்தோல்வித் தானத்தைப் 'பிரதிஞ்ஞா விரோதம்' என்பர் வடநூலார்.

இது நிற்க. இவர் பொருளறிதற்கு அரியதாக 'சைகை' என்னும் ஓர் வடசொல்லை வழங்கினமையால், இது 'என்ன வகையினும் மனங்கோளின்மை' என்னும் குற்றத்தின்பாற் படும் என்க.

இனிச் 'சைகை' யென்பது, செல்லுதல், வருதல், ஈதல், ஏற்றல், உடம்பாடு, உடம்பாடின்மை முதலியனபற்றிநிகழ்த்தும் கையசைப்புத் தலையசைப்பு முதலியவற்றைக் குறிக்கும் ஓர் சொல்லெனக் கொள்வோம் எனின், எழுத்தான் ஆகிய சொல் லெல்லாம் பொருள் குறித்துவரும் என்ற மேற்கோளுரை

பற்றி, எழுத்தோடு தொடர்பில்லாத சைகையும் பொருளுணர்த்துமெனக்காட்டி அதனை விலக்குதல் பயனில்கூறலாம் என்க. எழுத்து என்றது ஈண்டு ஒலியை.

நச்சினார்க்கினியரும், 'ஓசையைச் சொல்லென்றீரேல், கடலொலிவிண்ணொலி முதலியனவும் சொல்ஆகாவோ எனின், இவை எழுத்தினான் ஆக்கப்படாமையான் சொல்லெனப்படா வென்றும், அவ்வாறே முற்குவிளை முதலியனவும் சொல்லாகா வெனவும், 'உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே', என்னும் சூத்திரவுரையுள் கூறினார். அந்நச்சினார்க்கினியரும் எடுத்துக் காட்டாத 'சைகை' என்பதனைக் குறிப்புரையாளர் எடுத்துக் காட்டி விலக்கவெழுந்தது, தாம் அவரினும்காட்டில் நுணுகிய ஆராய்ச்சித் திறனுடையார் என்பதைக் காட்டுதற்குப்போலும்.

சங்கர நமச்சிவாயரும் மொழிக்கு முதற்காரணமாகும் ஒலியன்மையால் முற்குவிளை முதலியன எழுத்தாகாவென 'மொழி முதற் காரணமாம் அணுத்திரளொலி எழுத்து' என்னும் சூத்திரவுரையுள் கூறினார். அவரும் கைச்சைகை தலைச்சைகை முதலியவற்றை எடுத்துக் காட்டி விலக்கினாரிலர் என்க.

மறுப்பு 30

(சூ. 1-குறிப்புரை.)

'அதிவியாப்தி' 'அவ்வியாப்தி' என்ற வடசொற்களை தமது உரையில் புகுத்தி உரைத்த குறிப்புரையாளர், தமிழ் இலக்கணமுறைப்படி 'அதிவியாத்தி,' 'அவ்வியாத்தி' யென எழுதல்வேண்டும் என்பதை அறியார்போலும். தமிழ்மொழியிலே 'அப்பம்' என்றாற்போலப் பகரத்தின் முன் பகரம் (வந்து) மயங்குமேயன்றி, வேறோர் எழுத்து மயங்குதலின்று என்னும் சிறப்பிலக்கணம் உள்ளதென்பதை அறிந்திலரோ, அன்றி அவ்வாறு இலக்கணம் உள்ளதென்று அறிந்துவைத்தும் தமிழ்மொழிக்குள்ள இயற்கைச் சிறப்பை ஏன் காட்டவேண்டுமென்று கருதினரோ, அன்றித் தம்முடைய இலக்கணமுறையின்படி, தமிழ் இலக்கணங்களெல்லாம் இனித் திருத்தப்படல்

வேண்டும் என்று கருதினரோ அறிகிலம். அஃது எற்றாயினும் தொல்காப்பியவுரை ஆராய்ச்சி செய்வாரத் உரை நடைக்கு இது சிறிதும் அடாதென்க. ஆசிரியர் சிவஞான முனிவர் 'அதிவியாத்தி' 'அவ்வியாத்தி' என்றே இலக்கண விளக்கச் சூறாவளி முதலியவற்றுள் எழுதியவாறு காண்க.

மறுப்பு 31

(சூ. 1. குறிப்புரை)

[நச்சினார்க்கினியர், 'சொல் என்றது எழுத்தினான் ஆக்கப் படும் இருதிணைப் பொருட்டன்மையையும் ஒருவன் உணர் தற்குக் கருவியாம் ஓசையை' என்று சொல்லிப், பின்னர் 'இனிச் சேனாவரையர் சொல் பொருள் குறித்துவருமென்றாரால் எனின், ஒருவன் பொருட்டன்மையை உணர்தற்குச் சொல் கருவியாய் நிற்றலன்றித் தனக்கோர் உணர்வின்மையின் தான் ஒரு பொருளைக்கருதி நிற்றல்இன்றென மறுக்க' என்றுகூறிச் சேனாவரையரை மறுத்தனர். ஆனால், சேனாவரையர் 'சொல் கருவியாய் நில்லாது' என்று கருதினர் என்பதற்குப் பிரமாணம் தெரியவில்லை.] என்றனர்.

மறுப்பு—இதனால், பொருட்டன்மையை ஒருவன் உணர் தற்குச் சொல்கருவியாம்' என்ற நச்சினார்க்கினியர் துணிபே சேனாவரையர்க்கும் கருத்தெனவும், தமக்கும் அதுவே கருத் தெனவும் குறிப்புரையாளர் அறிவித்தார் ஆயினர். சேனா வரையரது கருத்தோ அதுவன்று. சிவஞானமுனிவர் முதலா யினோர் கருத்தும் அதுவன்று.

'சொன்னிகழ்ச்சிக்குப் பொருள் இடம்' என்பது சேனா வரையர் கருத்து. இதனை 'உயர்திணையென்மனார் மக்கட் சுட்டே' என்னும் முதற் சூத்திரவுரையின்கண்ணே காணலாம். மேலும் அவர் 'பொருளைச் சொல் இன்றி அமையாது' என்று 'அன்னபிறவும் கிளந்தவல்ல, என்னும் (396) சூத்திரவுரையுட் கூறினர். 'மொழிப்பொருட்காரணம் விழிப்பத்தோன்றா.' என்னும் சூத்திரவுரையுள் 'பொருளோடு சொற்கு இயைபு இயற்கை' என்றும் கூறினர். இன்னும் அவர் பொருளோடு

சொற்குஉள்ளதொடர்புபற்றி உரைத்தனவெல்லாம் திரட்டிப் பிரயோகவிவேகநூலார் 18. ஆம் சூத்திரவுரையுட் கூறினர். அதனை அடியிற்காண்க.

'உரிச்சொல்லாவது பொருளும் தானும் பேதமின்றி அபேதமாதற்குரியசொல். குடம் அறியாதானுக்குக் குடத்தைக்காட்டி இது குடம் என்றால், இதுவென்னும் சுட்டுப்பெயரும் குடப்பொருளும் பேதமின்றி அபேதமாய்த் தோன்றும் என்றும், சொல்லை நித்தியம் என்றும், விபுவென்றும், திரவியம் என்றும், சத்தநூலார் கூறுவர். அர்த்தநாரீசுவரன் என்னும் பார்வதி பரமேசுவரன்போலே சொல்லும் பொருளும் பேதாபேதமாய் வரும் என்பாரும் உளர். காளிதாசனும், 'வாகர்த்தாவிவ, என்னும் சுலோகத்தால் அவ்வாறு கூறுவான்.

'உரிச்சொல்லாவது பொருளைக் காரணமாய் நின்று உணர்த்தற் குரிய சொல் அன்றோவெனின்,

'பொருண்மைதெரிதலும் சொன்மைதெரிதலும்
சொல்லின் ஆகும்.' எனக்காரணமாகவும்,
'கொடையெதிர் கிளவி' எனச் சம்பிரதானமாகவும்,
'முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழிமேலும் ஒருங்குடன் நிலையலும்.' என

அதிகரணமாகவும்,

'அதிர்வும் விதிர்வும் நடுக்கம் செய்யும்.'
'ஆடூஉ வறிவசொல் மகடூஉ வறிசொல்.'
'முதலறிகிளவி.' 'சினையறிகிளவி.'
'அம்மகேட்பிக்கும்.' எனக் கருத்தாவாகவும்,

சொல்லைக் கூறுவர். அவையெல்லாம் உபசாரம் என்க.

'கமநிறைந்தியலும்.' 'உருவுட்காகும்.'
'செல்லல் இன்னல் இன்னாமையே.'
'எல்லேவிளக்கம்.' 'கொல்லே ஐயம்.' எனச்

சொல்லும் பொருளும் பேதமின்றி அபேதமாகக் கூறுதலின், தொல்காப்பியர்க்கும் அதுவே கருத்தென்க.'

'இனிச் சேனாவரையரும், சத்தநூலார் உரைத்தாங்கு உரைப்பர். என்னை? 'ஆயிருதிணையின் இசைக்குமனசொல்லே' எனவும், 'பெண்மைசுட்டிய உயர்திணை மருங்கின்', 'செல வினும் வரவினும்' எனவும் வருதலானும், 'ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி' யென ஒற்றுமைப்பட்டுவருதலானும், சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமேயாம் என்றும், இரண்டும் ஒன்றே யாம் என்றும், 'மொழிப்பொருட்காரணம்' என்னும் சூத்திரத் தில் பொருளோடு சொற்குஇயைபு இயற்கையாகலான் என்றும், ஆறுவதன் சூத்திரத்துத் 'திரிந்து வேறுபடூஉம்' என்பதற்கு உதாரணம் 'எள்ளது சாந்து' 'கோட்டதுநூறு' என்பன வற்றோடு ஒருங்கு 'சொல்லது பொருள்' என்பதனையும் காட்டி முழுவதும் திரிந்தவென்றும் கூறுவர்.'

'இனி நச்சினார்க்கினியர் சத்தநூலாரோடு மாறுபடச்சொல்லைப் பொருள் உணர்த்தற்குக்கருவி யென்பர்.

'தார்க்கிகர் சுவரூப சம்பந்தம் என்பர்.'

(பிரயோகவிவேகம்)

இனி, சொல்லும் பொருளும்பற்றி ஆசிரியர் சிவஞானமுனிவர் கொள்கை ;— 'சொல்லும் பொருளும் பேதாபேதம்' ஆகலின், அதுபற்றி,

'உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப.'

'கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள.'

'புதிதுபடற் பொருட்டே யாணர்க்கிளவி.' எனச் சிலவற்றை வேற்றுமை நயம்படவும்,

'கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு.'

'தடவும் கயவும் நளியும் பெருமை.' எனச்சிலவற்றை ஒற்றுமை நயம்படவும் கூறுவர் ஆகலின், ஈண்டு 'எழுத்தெனப் படுப அகரமுதல் னகரவிறுவாய்' என ஒற்றுமை நயம்படக் கூறிற்று. சொல்லும் பொருளும் வேறென்பார் எழுத்தெனப் பெயர் பெறுவனவற்றை எழுத்தென்றது ஆகுபெயர் என்ப. இனிச் சொல்லும் பொருளும் ஒன்றென்பார் 'புதிதுபடற்

பொருட்டே யாணர்க்கிளவி', என்பது 'இராகுவினது தலை' என்றாற்போலும் என்பர்.' (தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி) 'சொல்லின் திரிபே பொருளென அபேதம் கூறுவார் மதம் பற்றித் 'தொகையது விரி' 'பொருளது கேடு' என்பவற்றோடு 'சொல்லதுபொருள்' என்பதனையும் சிறிதுதிரிந்ததற்கு உதாரணம் காட்டினர் (இ. வி. நூலாசிரியர்.) மேற்சொல்லாவது இருதிணை ஐம்பாற் பொருளையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசைஎனப் பேதமாகக் கூறியதை மறந்தார்போலும்? இது இலக்கண விளக்கச்சூறாவளி.

இனி, இலக்கணக்கொத்து நூலார்கருத்து:—

'சொல்லை நித்தியம் என்றும் அநித்தியம் என்றும், வியாபகம் என்றும், ஏகதேசம் என்றும், பொருளென்றும், பொருளன்றென்றும், கடவுள் கட்டினதென்றும், அறிவாரும், அறியாரும், சாதியாரும், சமயத்தாரும், தேசத்தாரும், காலத்தாரும், தத்தமக்கு வேண்டியவாறே கட்டினதென்றும், ஒருவரானும் கட்டப்பட்டதன்று என்றும், தானே அநாதியாய் உள்ளதென்றும், சொல்லும் பொருளும் சாததனதாடைபோல வேற்றுமை யென்றும், 'கோட்டதுநூறு' போல ஒற்றுமையென்றும், அர்த்தநாரீச்சுரன்போல வேற்றுமைக்கும் ஒற்றுமைக்கும் பொதுவென்றும், இன்னும் பலவாற்றானும் கூறுவர். அவை நிற்க, இனித் தொல்காப்பியர் ஒருவர் தாமே, அச்சொல்லை,

'அயர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ்செய்யும்' என இயற்றுதற்கருத்தாவும்.

'அம்மகேட்பிக்கும்.' என ஏவுதற்கருத்தாவாகவும்,

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும்.' எனக் கருவியாகவும்,

'கொடை யெதிர்கிளவி' யெனக் கோள்வோனுகவும்,

'முன்மொழி நிலையலும்.' என இடமாகவும், பொருளிற்கு வேறென்று கூறி,

'கமநிறைந்தியலும்.' 'உருவுட்காகும்.'

'செல்லல் இன்னல் இன்னாமையே.'

'எல்லே விளக்கம்.' 'கொல்லே ஐயம்.' எனப் பொருளிற்கு வேறன்றென்றும் கூறினர். அச்சொற்கு ஒரு குணமே யன்றிப் பலகுணம் பொருந்தாது. அவர்க்கும் அதுவே கருத்து. அவர் கருத்தறிதல் அருமை.' எ—து.

மேற்கூறியவாற்ருன், சேனாவரையர்க்குச் சொல்லும் பொருளும் ஒற்றுமை நயம்பற்றிய கருத்துப் பேதா பேதம் என்பதும் வேற்றுமை நயம்பற்றிய கருத்து 'சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாம் என்பதும், அதுவே பிரயோக விவேக நூலார்க்கும், சிவஞான முனிவர்க்கும் கருத்தாம் என்பதும் தெரியப்படும். ஆகவே பொருளை ஒருவன் உணர்தற்குச் சொல் கருவியாம் என்னும் நச்சினார்க்கினியர் கருத்தே சேனாவரையர்க்கும் கருத்தாம் என்று குறிப்புரையாளர் கூறியது பிழையாதல் அறிக. இதனாலே சொல்லானது பொருளை ஒருவன் உணர்தற்குக் கருவியாம் என்ற நச்சினார்க்கினியர் உரையும், அவ்வுரையைத் தழுவியுரைத்த குறிப்புரையாளர் உரையும் மறுக்கப்பட்டவாறு அறிக.

இனிப் பொருளை ஒருவன் உணர்தற்குச் சொல் கருவியாம் எனக் கொள்ளின் இழுக்காவது என்னையோவெனின், கூறுவாம். சொல்லான் அன்றியும் பொருள் அறியப்படுவதுண்டு என்பதாகக் கருத்தில் வைத்துக்கொள்ளல்வேண்டும். சாத்தன் என்பவன் கொற்றன் என்பவனைப் பார்க்க அவன் வீட்டுக்குச் சென்ருன். கொற்றன் அங்கே யில்லை. அவன் அங்கே இல்லை யென்பதனைச் சாத்தன் உணர்ந்தான். இங்கே சாத்தனுக்குக் கொற்றன் அங்கே இல்லையென்றும் உணர்ச்சிக்குக்கருவியாவது சொல்லன்று. கொற்றன் அங்கே இருந்தான் என்று கொள்வோம். சாத்தனுக்குக் கொற்றன் அங்கே இருந்தான் என்னும் உணர்ச்சிக்கும் கருவியாவது சொல் அன்று. அவ்வுணர்ச்சிக்கொல்லாம் கருவி சொல்லன்றி வேறென்ரும். அது நிற்க.

'சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும்'

சொல்லினாகும் என்மனார் புலவர்.' என்னும்

சூத்திரக் கருத்தின்படி, ஒருவனுடைய உணர்ச்சிக்குப் சொல் லும் பொருளும் ஆகிய இரண்டும் செயப்படுபொருள் நீர்மையில் உள்ளன. ஆகவே சொல்லை ஒருவன் உணர்தற்குக் கருவி யாவதும் சொல்லேயெனல்வேண்டும். ஆகவே ஒரு தொழிலுக் குக் கருவியும் செயப்படுபொருளும் ஒன்றேயெனப்பட்டு வழு வாதல் அறிக. அற்றன்று, 'சாத்தன் தன்னைக் குத்தினன்' என்புழிக்கருத்தாவும் செயப்படுபொருளும் ஒன்றாயினாற்போல, ஈண்டுச் செயப்படுபொருளும் கருவியும் ஒன்றுதற்கு இழுக்கில்லை யெனின், 'சாத்தன் தன்னைக் குத்தினன்' என் வாசகம் வந்ததாயினும், குத்துதற்கருவி சாத்தனது உறுப்பு ஒன்றும், குத்தப்பட்டது பிறிதோர் உறுப்புமாம் என்பது பெறப் படுதலின், ஆண்டுக் கருத்தாவும் செயப்படுபொருளும் ஒன்று மாறில்லை. அவ்வாறே கருவியும் செயப்படுபொருளும் ஒன்று மாறில்லை யென்க.

அன்றியும் 'கருவி' யென்பது 'வினைமுதற் றொழிற் பயனைச் செயப்படு பொருட்கண் உய்ப்பது.' 'சாத்தன் கொற்றனை வாளால் வெட்டினன்,' 'கையால் அடித்தான்' என்புழி, முறையே வாளும் கையும் கருவியாயின. வெட்டு தலும் அடித்தலும் வினைமுதலாகிய சாத்தனது தொழில்கள். அத்தொழில்களின் பயனைச் செயப்படுபொருளாகிய கொற்றன் என்பானிடத்து அக்கருவிகள் உய்த்தன. சாத்தன் கொற்றனை வணங்கினன் என்புழி வணங்கற் றொழிலுக்கு வினைமுதல் சாத்தனேயெனினும் அத்தொழிலை நிகழ்த்தியது அவன் தலை யாகிய கருவியேயாம். ஆகலின் வணங்கல் என்பது தலையின் தொழிலென்று சொல்லப்படும். அவ்வாறே வெட்டுதற் றொழிற்கும் அடித்தற்றொழிற்கும் வினைமுதல் சாத்தனெனினும் அவை முறையே அவன் வாளின் தொழிலும் கையின் தொழி லுமேயாம். எனவே அக்கருவிகளால் அத்தொழில்கள் நிகழ்தல் கண்டாம். 'எழுத்தாணி எழுதிற்று' என்புழி எழுத்தாணி கொண்டு எழுதினவன் ஒரு சாத்தனேயெனினும், எழுதுதல் எழுத்தாணியின் தொழிலே யாம் என்று சங்கர நமச்சிவாயர்,

'செயப்படுபொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே.' என்னும் சூத்திரவுரையுள் கூறியது காண்க.

ஆகவே, பொருளை ஒருவன் உணர்தற்குச் சொல்லொனது கருவியாம் எனின், சொல்லுக்கு உணர்தற்றொழில் உரித்தாதல் வேண்டும். அஃது இன்மையால், சொல்லானது உணருங்கருவி அன்றெனத் தெளிக.

சொல்லுணர்ச்சியேயில்லாத மூங்கையன் ஒருவனுக்குப் பொருளுணர்ச்சி நிகழுதல் கூடும். அவனது உணர்ச்சிக்குக் கருவியானது சொல்லன்றிப் பிறிதொன்றேயாம்.

அற்றேல், ஒருவன் ஒருபொருளை உணர்தற்கு உண்மைக் கருவிதான் யாதோவெனின், உணரும் ஆற்றலுடைய மனமே கருவியாமெனத் தெளிக. அம்மனமே சொல்லையுணர்தற்கும் கருவியாமென்க. எனவே மனமே சொல்லையும் பொருளையும் ஒருங்குணரும் ஆற்றலுடைய கருவியாமெனத் துணிக.

இதுவே முடிந்த கருத்தென்பதை,

'பொருள் இந்திரியம் உணர்வோடு புமான்
இருளின்றி யிடும் ஒளி இத்தனையும்
மருவும் பொழுதில் வருஞானமதின்
ஒருவும் பெயர் அர்த்தம் உதித்திடுமே.'

(சிவஞான சித்தியார்-பரபக்கம்-சத்தப் பிரமவாதிமதமறுதலை) என்னும் செய்யுளில் ஓதியவாற்றானும் உணர்க. அச்செய்யுளின் பொருள் :—'ஆன்மா ஒரு விடயத்தை அறியும்போது, அறியப்படுபொருளும் அதனைக் காட்டும் இந்திரியமும், அதனோடு கூடியுணரும் அந்தக்கரணங்களும், அவற்றிற்கு மூலமாகிய பிரகிருதியும், அவற்றை வெளியாகத் தோற்றுவிக்கிற திரோதான சத்தியும் ஆக இத்தனையும் கூடும் அளவில், ஆன்மாவுக்கு அறிவுண்டாம். அவ்விடத்தில் பெயர் நீங்கப்படும், சொல் தோன்றப்படும். ஆதலால் அர்த்தமே பிரதானம் என்க.' எ-று.

இனிச், சேனவரையர், 'அன்னபிறவும் கிளந்தவல்ல' என்னும் சூத்திரவுரையுள், 'பொருளைச் சொல் இன்றியமை

யாது' என்னும் வாய்பாட்டாற் கூறினர். 'சொல்லைப்பொருள் இன்றி யமையாது' என்னும் வாய்பாட்டாற் கூறினரிலர். அதனால், சொல்லின்றியும் பொருள் அறியப்படும் என்னும் கருத்துப் பெறப்படுதலால், அவர்க்கும் சத்தப் பிரமவாதி மறுதலையில் கூறப்பட்டவாறு பொருளே தலைமையென்பது கருத்துப்போலும்.

'மொழிப் பொருட்காரணம் விழிப்பத்தோன்று' என்னும் சூத்திரவுரையுள், 'சொல்லொடு பொருட்கு இயைபு இயற்கை' என்னாது, 'பொருளொடு சொற்கு இயைபு இயற்கை' யென்று அவர் கூறியதும் அதனையே வலியுறுத்தும்.

இத்துணையும் கூறியவாற்றால், பிரயோக விவேக நூலாரும் சிவஞானமுனிவரும் வடமொழியில் காளிதாசனும் கூறியவாறு, சொல்லும் பொருளும் (அர்த்தநாரீச் சுரனைப்போல) பேதாபேதம் (ஒருவாற்றால் பேதமும் ஒருவாற்றால் அபேதமும்) என்பதே முடிவென்பதும், அதுவே ஆசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்தென்பதும், வேற்றுமை நயம்படக் கூறுவார்க்கும், சேனாவரையர், கூறியவாறு சொல்நிகழ்ச்சிக்குப் பொருள் இடம் என்பதே பொருத்தமுடைத்து என்பதும், ஒற்றுமை நயம்படக் கூறுவார்க்கு ஒன்றேயாம் என்பதும், சொல்லைக் கருவி முதலிய போலச் சூத்திரங்களில் ஓதியவெல்லாம் உபசாரமே என்பதும், இஃதுணராது பொருளை உணர்தற்குச் சொல் கருவியேயாம் என்று நச்சினார்க்கினியரும் அவரைத்தழுவிக் குறிப்புரையாளரும் உரைத்த உரையெல்லாம் போலியுரை என்பதும் விளக்கப்பட்டவாறு அறிக.

இனி, நன்னூலாரும், ஆகுபெயர்ச் சூத்திரமாகிய

'பொருள்முத லாறோடு அளவை சொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகுபெயரே.'

என்பதனுள், கருவியாகுபெயர் என்பதற்கு வேறாகச் 'சொல்லாகுபெயர்' என ஒன்று வேண்டினர். அதற்கு உதாரணமாகச் 'சொல்லை புணர்ந்தான்' என்பதை வேண்டினர். இங்கே உணரப்பட்டது பொருள் ஆதலால், சொல் என்பது பொருளுக்கு ஆகுபெயர்

என்பர். அங்ஙனம் அவர் சொல்லாகுபெயரென வேறுகஒன்று வேண்டியதன் காரணத்தை நோக்கின், சொல்லும் பொருளும் பேதாபேதம் என்பதன்றி, அவை ஒன்றேயாமென்றுவது வேறே யாமென்றுவது ஒரு தலையாகத் துணிந்து கூறலாகாது என்பது கருத்துப்போலும், அஃது எற்றாயினும் பொருளுணர்ச் சிக்குச்சொல் கருவியன்றென்பதே அவர்க்கும் கருத்தாம் என்க.

இனி, 'உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே' என்னும் சூத்திரத்துரையுள் 'ஒருவன்பொருளை உணர்த்துதற்குச் சொல் கருவியேயாம்' என்று தந்துணிபுரைத்த நச்சினார்க்கினியர்,

'செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவியெல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.' என்னும்

சொல்லதிகாரப் புறனடைச் சூத்திரவுரையுள், 'சொற்பொருள்' என்னும் தொகைநிலைத்தொடர், மூன்றும்வேற்றுமைத் தொகை யாகவும், நான்காம் வேற்றுமைத் தொகையாகவும், ஐந்தாம் வேற்றுமைத் தொகையாகவும், ஆறும்வேற்றுமைத் தொகை யாகவும், உம்மைத்தொகையாகவும், பண்புத்தொகையாகவும், கொள்ளப்பட்டு, அவை விரியுங்கால் முறையே, சொல்லான் உணர்த்தப்படும் பொருளென்றும், சொல்லுக்குரிய பொரு ளென்றும், சொல்லின்உணரப்படும்பொருளென்றும், சொல்லது பொருளென்றும், சொல்லும்பொருளும் என்றும், சொல்லாகிய பொருளென்றும் விரியுமென்றும் கூறினர். பொருளுணர்ச் சிக்குச் சொல் கருவியேயாம் என்ற இவரது கொள்கைக்குத் தக்க 'சொற்பொருள்' என்பது கருவிப் பொருண்மைக்குரிய மூன்றும் வேற்றுமைத் தொகையென்றே முடித்தல்வேண்டும். அவ்வாறன்றி வேறுபலதொகைகளாகவும் காட்டி விரித்துரைத்தது 'மேற்கோண்மலைவு' என்னும் குற்றமாதல் அறிக.

இது இக்குற்றமாதல், இலக்கணவிளக்கச் சூறாவளியில், 'சொல்லின் திரிபே பொருளென அபேதம் கூறுவார் மதம் பற்றித் 'தொகையதுவிரி' 'பொருளதுகேடு' என்பவற்றோடு 'சொல்லது பொருள்' என்பதனையும் (ஆறும் வேற்றுமைப்

பொருளில்) சிறிது திரிந்ததற்கு உதாரணமாகக் காட்டினர். மேல்சொல்லாவது 'இருதிணை ஐம்பாற் பொருளையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையெனப் பேதமாகக் கூறியதை மறந்தார்போலும்' என்று ஆசிரியர் சிவஞானமுனிவர் கூறியதனுலும் உணர்க.

இனிச்சொல்லாவது இருதிணைப் பொருட்டன்மையையும் ஒருவன் உணர்தற்கு நிலமாகி நிற்கும் ஒலியாம்' என்ற அரசஞ் சண்முகனர் உரையும் போலியுரையாதல் இதனலே துணிந்துகொள்க.

(தொடரும்.)

பையன்.

திரு, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A.,
வழக்கறிஞர், சாத்தூர்.

சில்லாண்டுகட்கு முன் கோடை விடுமுறை நாட்களைக் கழித்தற் பொருட்டு ஆழ்வார்குறிச்சிக்குச் சென்றிருந்தேன். அக்காலை, சொல்லாராய்ச்சி செய்து வந்த மொழிநூற்புலவரு மெனது நண்பருமாகிய, செந்தமிழ்ப்புலவர் ஒருவர் அவ்வூருக்கு வந்திருந்தார். அவரைக்கண்டு, அவரோடுரையாடி மகிழும்பேறு எனக்குக் கிட்டியது. நாங்களிருவரும் தமிழ் மொழி பற்றிய பலபெரும் பொருள்கள் சுட்டிப் பேசிக் களிப்பெய்தினேம். அங்ஙனமுரையாடிய போது, எனது நண்பர் 'பையன்' என்ற தமிழ்ச்சொல்லை யாராய்ந்திருந்தாரென வறிந்து பெருமகிழ் வெய்தி, அச்சொற்பற்றிய அவரதாராய்ச்சியை யறியவவாவுதல் செய்தேனக, அப்புலவர் 'பையன்' பகுபதமென்றும், அதன் முதனிலையும், ஈற்றுநிலையும் முறையே 'பை'யும் 'அன்'னுமா மென்றும், புத்தகப்பையை முதுகிலிட்டுச் செல்லும் சிறுவன் என்று முதலிலும், சிறுவனென்று பின்னரும் முறையே சிறப்பாகவும் பொதுவாகவும், அச்சொல் பொருள் பயக்க நேர்ந்ததென்றும், தம்மாராய்ச்சியிற் கண்டதாகக் கூறினர். ஆங்கிலப் பெருங்கவியாகிய 'ஷேக்ஸ்பியர்' தம் நாடகமொன்றில் மக்கள் அடையும் பல பருவங்களையும் அணிசெய்து கூறப்புகுந்து

மக்களிளமைப் பருவத்தைப் 'புத்தகப்பையை முதுகிலிட்டுக் கொண்டு பள்ளிநோக்கி மனமிலாது தளர்நடையிட்டுச் செல்லும் சிறுவன்' எனக்கூறி விளக்கியுள்ளார் என்று மேற்கோளும் காட்டி என் நண்பர் தம்கொள்கையை நிலைநாட்ட முயன்றனர். எடுத்த மொழியாலும், எதுக்களாலும் எத்துணைதான் அவர் விரித்துரைத்தாலும், அதர்கொள்கை யெனக்கு உடன்பாடில்லா ததாயிற்று. ஆயினும் 'பையனை' மொழிநூற் புலவர் இன்னும் ஆராய வேண்டியவராயுள்ளாரெனத் துணிந்தேன்.

பையுட் புத்தகத்தைவைத்து, அதனை முதுகிற் சுமந்து செல்லும் வழக்கம் பண்டைக்காலச் சிறுவர்களுக்கிருந்ததாக யாண்டும் வெளியாகவில்லை. ஏடுகளைத் தூக்கில் ஏற்றிச்செல்லு தல்தான் பண்டைவழக்கம். 'பையற்' பருவம் பள்ளிக்கூடம் செல்லும்பருவத்துக்கு முன்னமேயுள்ள பருவத்தையும் குறிக்கு மென்பது 'பையலென்றபோதே பரிந்தெடுத்து' என்ற செய்யுள் வழக்கினாலும் பிறவற்றாலு மறியக் கிடக்கின்றது. சிறு வருள்ளும் பள்ளிக்குச் செல்லாதாருமுளாராதலின், பள்ளிக்குச் செல்லும் சிறார்க்கிட்ட சிறப்புப்பெயர், செல்லாதாரையு முளப் படுத்தும் பொதுப்பெயராதல் இயற்கையில்லை. ஆதலினப் புலவர்கூறிய மொழிப்பொருட் காரணம் எனக்கு இசைவில்லாத தாயிற்று.

ஆங்கிலமொழி 'Boy' க்கும் தமிழ்ப் 'பையனு'க்கும் யாதொரு தொடர்புமில்லை. அச்சொற்களுக்குள் காணப்படும் ஒலியொற்றுமை போலி.

தமிழ் மொழிக்கட் காணப்படும் நிறப் பண்புப்பெயர் களுட்பல, குணப்பண்பையுமுணர்த்து மாற்றலுடையனவாம்.

'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'

'இன்சொலா லீர மளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்'

என்ற குறள்களில் 'செம்மை' நிறத்தின் வேறாய குணப்பண் பையும் சுட்டிநிற்றல் காண்க.

'வாலறிவன்,' 'வாலியநேசம்' என்ற ஆன்றோர் வாக்கு களில், வெண்மைநிறத்தையுணர்த்தும் 'வால்' என்னும் சொல், ஒட்பத்தையும், தூய்மையையும் குறித்து நிற்கின்றது. 'பசுமை' என்னும் செந்தமிழ்ச்சொல் பச்சை நிறத்தையுணர்த்துவதோடு

இளமையையும் உணர்த்தும். பழந்தமிழ் நூல்களிலும் பசுமைக் கிளமைப்பொருளுள தாதலைக் காணலாம். பசுமை என்னும் பண்புப்பெயர் 'அன்' என்னும் ஆண்பாற் பெயர் விகுதியொடு புணர்ந்து, 'பையன்' என்றாகி, இளைஞன் என்றபொருள் பயந்துளது எனக்கொள்ளுதல் மொழிநூன் முறைறமைக்கு ஒப்ப முடிந்ததாகும்.

'பசுமை' சொன்னிலைபாற் பகுபதம்என்றும், பொருணிலையாற் பகாநிலைப்பதம் என் இலக்கணறும் நூலாசிரியர்கள் வரையறுத்துள்ளார்கள். பகுத்துப் பார்க்குமிடத்துப் 'பசு' பகுதியும் 'மை' விகுதியும் ஆம். ஆயினும், 'பச்'சே பச்சை நிறமுணர்த்து முதல் ஆகும் என்பது பச்சை, பசலை, பயறு முதலிய சொல்லுருவங்களாலறியலாகும். 'பச்'செனும் முதலும், 'மை' விகுதியும் புணர்ந்து, 'பசுமை' என்றாயிற்று; புணருங்கால் 'உ'கரம் தோன்றிற்று. சகரவொற்று மொழிக்கீறாகாதெனின், 'பச்' மொழி முதலன்றி மொழியன்று எனகூறி விடுக்க. 'பசறு' 'பயறு' எனும் சொல்லின் முன்னுருவம். ஆந்திரத்தில் பயறு இன்னும் 'பசலு' என்று வழங்கப்படுதல் காண்க. பயறு பாசிப் பயறைத்தான் முதலிற்குறித்தது; பின் பொதுப்பெயராயிற்று. பாசியும் பயறும் ஒருபொருட் கிளவிகள். தெலுங்கிலுமச்சொலப் பொருட்டாதல் காண்க.

"சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுய ரலமரல் கேட்டு நடுங்கு
சுவல சைத்த கையள்" என்பது

முல்லைப்பாட்டு. 'பசலை' என்ற சொற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'வருத்தம்' என்று பொருள் செய்துள்ளார். அப்பேருரையாசிரியர் பெருமைக்குச் சிறிதும் குறைவெண்ணாது, அச்சொல்லை யீண்டு ஆராய்வோம். ஒருவனை மிகச்சிறுவன் என்று கூறவெண்ணுவார் 'அவன் பச்சைப்பசலை' என்று உலகவழக்கிற் கூறுவதை நாம் பலகாற் கேட்டுளோம். 'பசலைக் கன்று' எனும் தொடருக்கு புனிற்றிளங் கன்றெனக் கூறலே பொருத்தமுடைத்து. சிறுதாம்பாலே காலிலே தளையிடப்பட்ட மிகச்சிறிய கன்றென முதலடியிற் கூறப்பட்டுளது. முல்லைப் பாட்டின் செய்திகள் நிகழ்ந்தகாலம் 'பெரும் பெயல் பொழிந்த சிறு புன்மாலை. அப் பெரும் பொழுதாகிய கார்காலம் தான் பசுக்கள் ஈனும் காலம். புனிற்றிளங்கன்றைக் காலில் சிறுமென் கயிறுகொண்டு பிணித்தல் இக்காலத்தும் வழக்காதலாலும்,

வருத்தத்தைச்சுட்டத் 'துயர்' 'அலமரல்' என்றிருவேறு சொற்கள் அப்பாட்டில் வருகின்றனவாதலாலும், 'பசலை' என்பது உலகவழக்கிலும் இளமை குறித்து வழங்கப்படுவதாலும், 'பசலை' என்ற சொல்லால் நப்பூதனுர் புனிற்றிளந் தன்மையையே குறித்தனர் எனக்கொள்ளவேண்டும்.

'பசுமை' என்ற பண்புப்பெயர் 'அன்' விகுதியொடு புணர்ந்து பையன் என்ருயிற்றெனக் கண்டோம். ஈறுபோதல் என்னும் நன்னூல் விதியால், 'மை' விகுதிபோய் உகரம் சகரத் தொடு கெட்டு அடி அகரம் ஐகாரமாயிற்றென்று நுண்ணுணர்வு மிக்க இலக்கிணவறிஞர் கூறுவர். ஒலியுலகத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளைக்கண்ட நுண்ணுணர்வுடையார் இலக்கண விதிகள் அமைத்துள்ளார். 'பசுமை' என்ற மொழியில் 'மை' யும் உகரம் சகரத்தொடும் கெட்டபின்னர்ப் 'ப' கரம் தனியாய் நின்று 'பை' ஆகுமெனல் ஒலிமுறைதெரிந்தார் ஒப்புக் கொள்வதொன்றன்று. 'ப' கரம் 'அன்' ஞேடு புணருங் காலும் அகரம் ஐகாரமாதல் ஒலிமுறையிற் காணப்படவில்லை. 'பசுமை', 'அன்' விகுதியொடு புணருங்கால், அதன் ஈற்று 'மை' யும் இடை உகரமும் கெட்டு, 'ச்' அதற்கினமான மற்ருெரு அண்ணவெழுத்தாய 'ய்' ஆக மாறிப் 'பய்' என நின்று, 'தனிக்குறின் முன்னெற்றுயிர்வரினிரட்டும்' என்ற விதிப்படி 'ய' கரம் இரட்டித்து 'பய்யன்' என ஆயிற்று என்றும், பின் 'பய்' என்ற ஒலி பகரமீதேறிய ஐகாரத்தின் ஒலி என்றெண்ணப்பட்டு, 'பையன்' என்றெழுதப்பட்டது என்றும் கொள்ளின், அது ஒலிநூற்புலமையுடையார்க்கு ஒப்ப முடிந்ததாகும். அரசன், அரையன் என்று மாறும்போது சகரம்யகரமாக மாறியது காண்க. அங்ஙனம் 'ச'கர ஒற்று 'ய'கர ஒற்ருகமாருது, 'அன்' ஞெடு புணர்ந்து 'பசன்' என்ருகித் தொண்டைநாட்டார் உலகவழக்கில் இன்றும் இருந்து வருவது முன்னர்க்கூறிய கொள்கையை வலியுறுத்தத் தக்க சான்று. 'பசன்' நாளடைவில் 'பயல்' என்று மாறி, 'பையனி' லும் சிறிது மாறுபட்ட பொருளை யுணர்த்தி நிற்கின்றது. 'பய்யன்' உருவத்தைச் சிலர் 'பையன்' என மாற்றிய பின்னர், அவ்வுருவத்திஞல் சில புலவர் மயக்கவுணர் வெய்தி, 'பை'+'அன்' எனப் பகுத்து, அம்மொழிக்குப்பையைச் சுமந்து செல்பவன் எனப்பொருள் கண்டிடர்ப்படுவர்.

'பைய' னை ஆராயப்புகும் மொழிநூலறிஞர்க்கு பெரியதோர் இன்பமும் உவகையுமுண்டாமென்பது வெளிப்படை.

பொருண்மொழி.

வித்துவான் திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்தரக் கலாசாலை, திருவத்திபுரம்.

யான் சிறிது நாட்களுக்குமுன் ஒருஆங்கிலநூலைப் படித்து வருங்கால், இத்தலைப்பொருள்பற்றிய சொற்பொழிவொன்று அதன்கண் இருக்கக்கண்டேன். அதனையான் நுணுகிப்படித்து வருங்காலத்தில், சில நுண்பொருள்கள் அமைந்திருப்பதை யுணர்ந்து அதன்உட்பொருளைத் தமிழில் எழுதின் பலர்க்கும் பயன்படுமென்றெண்ணினேனாகலின், இதுபோது எழுதுவேனாயினேன்.

பொருண்மொழி யென்பது பழமொழியைப்போல் நுண்பொருளை யகத்தேகொண்ட உயர்ந்தோர் கூறும் நன்மொழி யாகும். இது நம் தமிழ்நூல்களில் "பொருளுரை" யென்றும் "பொருண்மொழிக் காஞ்சி" யென்றும் வழங்கப்பெறுகின்றது. * "பொய்யில் புலவன் பொருளுரை" யென்று சீத்தலைச் சாத்தனாராலும், †"மூதுரை பொருந்திய" என்ற சூத்திரத்துள் "பொருண்மொழிக்காஞ்சி" யென்று ஐயனாரிதனாராலும் கூறப் படுதல் காண்க. பொருண்மொழிக் காஞ்சியாவது, "எரிந்திலங்கு சடைமுடி முனிவர், புரிந்துகண்ட பொருண்மொழிந்தன்று" (பு-வெ-மாலை-271) என்பர். பொருண்மொழியென்றதொடர், பொருளைமொழிதல் எனவிரியும் வேற்றுமைத்தொகையாகும். மொழி, முதனிலைத்தொழிற்பெயர். பொருளாவது முனிவர்கள் விரும்பிக் கண்டுதெளிந்த உண்மையென்பதாகும்.

இதன்கண் முனிவராவார் 'சடைமுடியுடையராய் உயர்ந்த வொழுக்கமும்' உலகினையும் அதற்கு முழுமுதலாகிய இறைவனையும் ஒப்பக்காணும் ஞானக்கண்ணுமுடையராய், மக்கட்கு

---

 * மணி. 22—61. † பு. வெ. மாலை. சூ. 12.

வேண்டிய அறிவுநூல்களும் பிறவும் ஆக்கித்தரும் பேரருள் உடைய பெரியோராவர் என்பது அறிஞர்முடிபு. இவர்தம் அறிவும் ஆற்றலும் ஏனையர்க்குள்ளனபோல்வன அல்ல. சுருங்கச்சொல்லின், மக்களுட் கற்றோரினும் சிறந்த கல்வியறிவும், ஒழுகலாறும் உடையோர் என்பது மிகையாகாது. ஆகவே, முனிவர் பெருமக்கள் நம்மனோர்க்கு அறிவுகொளுத்துமாற்றால் உரைப்பனவே பொருண்மொழியென்பது அறிஞர் கொள்ளும் கொள்கையாயிற்று.

இப்பொருண்மொழி விழுமியபொருளைத் தன்னகத்தே கொண்டுபெருகியும், சுருங்கியும்வருதல் நம்நூல்களிற் காணலாம் சுருங்கிவருதலே பெரும்பான்மையெனினும், சுருங்கியேவருதல் வேண்டுமென்ற வரையறையின்மையால் பெருகியும் வருதல் இயல்பாயிற்று. இவை எத்துணைச் சுருக்கமாயிருக்கின்றனவோ அத்துணையும் பொருட் பெருக்கமுடையவாதல் கண்கூடு. எடுத்துக்காட்டாக, திருக்குறள் ஒன்றே யமையும். சின்மென்மொழியால் விழுமியபொருளைத் தன்னகத்தே யுடைத்தாய் ஒவ்வொரு திருக்குறளும் அமைந்திருத்தலும், தொட்டனைத் தூறும் மணற்கேணியைப்போலக் கற்றனைத்தூறும் பொருளாழமுடைமை சிறத்தலும் கொண்டு பொருண்மொழியாதலில் எவ்வகையினும் முற்பட்டிருக்கின்றது. இத்திருக்குறளை ஒரு பெரியோர் "கடுகைத் துளைத்துஎழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" என்றனர் என்ப. இவ்வியல்பே பொருண்மொழிக்கண் இருத்தல் வேண்டுமென்பது ஆங்கிலப் பெரியோர்களின் முடிபுமாகும். பொருண்மொழிக்கண் வரும் பொருள் தத்தம் மனத்தின்கண் முளைத்துத் தோன்றிய பழுத்த எண்ணங்களாகவும், பரந்த உலகில் நிலவும் பொருள்களைப் புலமையாற் கண்டு ஆராய்ந்து தெளிந்த முடிபுகளாகவும் இருத்தல் வேண்டுமென்பதும், அவை ஒருசில சொற்களாலாகிய சொற்றொடர்களாயிருத்தல் வேண்டுமென்பதும், அவை யாராயுந்தோறும் பயன்தருவனவாயிருத்தல் வேண்டுமென்பதும் பொருண்மொழியியல்புகளை யாராயும் ஆங்கிலப்புலவர்களின் கொள்கை. சுருங்கச்சொல்லின், பனையளவினவாய பொருளும் முடிபும் ஒருங்கே

திணிக்கப் பெற்றுத் தினை யளவிற்றாய சொற்றொடர்க்கண் விளங்குவது பொருண்மொழியின் உயிர்நிலையென்பர்.*

இங்ஙனம், சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமுமுடைமையால், இதனைப் பொன்னேபோற் புலவர்களும் மற்றவர்களும் போற்றி ஒழுகுகின்றனர். பெருங்காப்பியத்துட் சிறந்து விளங்குஞ் சிந்தாமணிபாடிய திருத்தக்கதேவரும் திருக்குறளாய பொருண்மொழிக்கணிருந்து சிலகொண்டு தம்நூலின்கண் வைத்திழைத்து அழகு செய்துகொள்வாராயினர். அவற்றுள், †"தொழுதகையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்-அழுதகண்ணீரும் அனைத்து" ‡ "செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும், எஃகதனிற் கூரிய தில்" என்பன அடங்கும்.

இவற்றுள், முதற்கண்ணதாய பொருண்மொழியை,

1 "தொழுததம்கையினுள்ளுந்துறுமுடிபகத்துஞ்சோர
அழுதகண்ணீரினுள்ளும்அணிகலத்தகத்தும்ஆய்ந்து
பழுதுகண்ணரிந்துகொல்லும்படையுடனேடுங்கும்பற்று(து)
ஒழிகயார்கண்ணும்தேற்றம்தெளிகுற்றார்விளிகுற்றாரே"

என்றபாட்டிலும், இரண்டாவதனை,

2 "செய்கபொருள்யாரும்செறுவாரைச்செறுகிற்கும்
எஃகுபிறிதில்லையிருந்தேயுயிருமுண்ணும்
ஐயமில்லையின்பமறனோடெவையுமாக்கும்
பொய்யில்பொருளேபொருள்மற்றல்லபிறபொருளே"

என்றபாட்டிலும் அமைத்துக்கொண்டிருத்தலும் புலப்படும். விநாயக புராணம் பாடிய ஆசிரியரும், திருக்குறளின் பொருட்பாலே தம்புராணம் பாடுந்தொழிற்கு வாய்த்தபொருளும் கருவியுமாகக் கொண்டது, இப்பொருண்மொழி நூற்கட்கிடந்து அணிசெய்தலே யன்றித் தொழிற்கண்முட்டறுக்கும் துணைக் கருவியாதலும் வலியுறுத்தும். இவ்வாறு இவை பயன்படுதலோடு

* "The essence of aphorism is the compression of a mass of thought and observation into a single saying."-John Morley.

† திருக்குறள்-828. ‡ குறள்-759.

1 சிந். 1891. 2, சிந். 497.

அமையாது இடையூறுகளால் கலங்கித் திகைப்பார்க்குக் கலக்கந்தீர்க்குமருந்துமாய் உண்மைப்பொருளறிதற்குதவிசெய்தல் குறித்தே பேக்கன் என்னும் புலவர்பெருமகனார் இவை அணியாதலே யன்றித் தொழில்முட்டறுத்தும், கலக்கத்திடைத் தெளிவுபிறப்பித்தும் நலம்செய்கின்றன என்னும் கருத்துறக் கூறினர். 3 இப்பேகன் என்பவரே பிறிதோரிடத்தில் இப்பொருண்மொழிகளை உப்பங்கழிகட்கு ஒப்புமைகூறி, கழியிடத்து உப்பினைப்பெற்று, வேண்டுமிடத்துக் கலந்து சுவையாக்கிக் கோடல்போல், இவற்றினிடத்து மெய்ப்பொருள்கண்டு வேண்டுமிடத்துத் துணைசெய்துகொள்ளலாமென்றார். " முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சு முண்பர் நனிநா கரிகர்" என்பது நற்றிணைக்கண் வருவதோர் (355) பொருண்மொழியாகும். இதனை ஆசிரியர் திருவள்ளுவனார் "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டு பவர்" என்ற குறளின்கண் (580) பெய்துகொண்டனர். மேலும், "நீரின் றமையா வுலகம் போலத், தம்மின் றமையா நந்நயந்து" என்ற அதன்கண் நீரின்றமையாது உலகம்என்பது ஒருபொருண்மொழி (நற். 1) இதனையும் திருக்குறளில் " நீரின்றமையா துலகெனின் யார்யார்க்கும், வானின் றமையா தொழுக்கு " என்னுங் குறளின்கட் (குறள். 20) பெய்துகொண்டனர். இந்நற்றிணைப் பாட்டில் " தாமரைத் தண்டா தூதி மீமிசைச், சாந்திற் றொடுத்த தீந்தேன் போலப், புரைய மன்ற புரையோர் கேண்மை" "எனவருவது ஒருபொருண்மொழியாகும். இதன் பொருள்-தாமரைத்தாதினையும் சந்தனத்தாதினையும் ஊதி அச்சந்தனமரத்திற் செய்த வள்ளத்துள் வைத்தவிடத்து அவை இடத்துநிகழ்பொருளும் இடமுமாயியைந்து தம்பெருமைபுலப்படுத்தினாற்போல உயர்ந்தோர்நம்மிடத்தே வைத்த கேண்மையும்

---

3. "These wise sayings, said Bacon, the auther of some of the wisest of them, are not only for ornament but for action and business, having a point or edge, whereby knots in business are pierced and discovered, And he applauds Cicero's description of such sayings as saltpits, that you may extract salt out of them and sprinkle it where you will"—John Morley.

பெருமை புலப்படுத்தி விளங்கும் என்பது. இதனை மணிவாசகப் பெருந் தகையார் தம் திருக்கோவையாரின்கண், "சீரிய லாவியும் யாக்கையு மென்னச் சிறந்தமையாற், காரியல் வாட்கண்ணி எண்ணக லார்கமலங்கலந்த, வேரியும் சந்தும் வியறந் தெனக் கற்பில்நிற்பரன்னே, காரியல் கண்டர்வண் டில்லை வணங்கு மெங்காதலரே." என்ற திருப்பாட்டில் (301) அமைத்துக் கொண்டனர். இவைபோலும் பொருண்மொழியாட்சிகள் பல வாதலின் இம்மட்டில் நிறுத்துகின்றேன்.

இப்பொருண்மொழிகள் புலவர்பெருமக்கள் இயற்றும் நூல்களின் இடையிடையே கிடந்து உலகியலில் மக்கள் ஒருவரோடொருவர் கூடியும் பிரிந்தும் ஒருங்கியைந்தும், பிற நிகழ்ச்சிகளைக்கண்டும் உணரும் உண்மைகளை எடுத்துக்காட்டு கின்றன. வாழ்க்கைச்சாகாடு உகைக்கும் மகன் அவ்வாழ்க்கைக் குரிய மாண்புகளையுணர்ந்து வல்லனாயிருப்பின், அது ஊறின்றாகி ஆற்றை யினிதுசென்று பயன்தருவதாகும்; அதனை யறியா னாயின், அவ்வாழ்க்கை துன்பநிலையமாய் மிகப்பல நோய்களைத் தலைத்தலைத்தருவதாய் முடியும். இவ்வியல்புபற்றியே உலகிய லறிவினை வளர்க்கும் பொருண்மொழிகள் மிக்க இன்றியமையா தனவாயமைந்திருக்கின்றன. வாழ்க்கை அரம்பும் அல்லலும் கரம்பும் செறிந்திருத்தலால், இன்னோரன்ன பொருண் மொழிகளைக் கிடந்தன கிடந்தாங்கே எடுத்துக்கோடல் வேண்டும். அவற்றின்கண் ஓராராய்ச்சியும் வேண்டாவாம். இந்நலம்குறித்தே, இவை நாமறியும் பலவுண்மைகளுள், ஒன்றை விலக்கியாதல், வேறொன்றைத் தழுவியாதல், ஒருண்மையின் ஒருபுடையைவிலக்கியாதல், மற்றொருபுடையை மிகைபடவிரித் துரைத்தாதல் செல்லாது எத்தகைய கட்டுப்பாட்டிற்கும், நிலைக்கும், ஒழுங்கிற்குந்தக அமைந்திருத்தல் வேண்டுமென்பர். ஆதலால் இவை மக்கள்வாழ்விற்கெனவமைந்த விதிகள் என்பது மிகையாகாது.

இதுகாறும் நாம்பொருள்மொழிகளாவன இவையென்றும், அவை பொதுவகையிற்படுமாறு இதுவென்றும், அவற்றின்

பொதுவியல்பும் அறிந்தோம். இனி இவற்றால் நாம் பெறும் அறிவினியல்பையும், இப்பொருண்மொழிகள் பயன்படுமாற்றையும் ஒருசிறிது காண்பாம்.

அறிவாவது "நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உள்ளவாறே யுணர்தல்" என்பது. இது மக்கள் தோன்றும்போதே உடன்தோன்றி அவரைத் தொழிற்படுத்துகின்றது. நாம் பெற்றதும் பெறுவதுமாகிய அறிவின் இயல்பினை ஆங்கிலப் பெருமக்கள் நால்வகைப்படுத்துத் தலைமை, கடைமை, இடைமை முதலிய ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கின்றனர். ஒருவன் தன் இயற்கையறிவினால் பொருளியல்புணர்ந்து பெறுவது தலையாய அறிவு என்றும், ஏனைமக்களின் ஒழுக்கநெறிகளில் நின்றும் அவரோடு பயின்றும் அவ்வாறே பொருள்களை யுணர்ந்தும் பெறுவது அதனிற் குறைந்த சிறப்பினையுடைய அறிவாமென்றும், மூன்றாவது பலநூல்களைக் கற்று அவைகாட்டும் நெறிக்கண் மனத்தைச்செலுத்திப் பொருள்களை யாராய்ந்து தெளிந்து பெறுவதாய அறிவு என்றும், இவற்றிற் கடையாய அறிவாவது நூல்களிடத்தும் ஆசிரியர்களிடத்தும் கற்றதுணையே பெறுவது என்றும் கூறுவர். * இப்பாகுபாட்டின்கட் பொருண்மொழிகள், மூன்றாம்பகுதிக்கண் அமைந்து, உண்மையொன்றின் ஒருசார்இயல்பினை நமக்குணர்த்தி ஏனையவற்றை ஆராயுமாறு செய்யவல்லனவாகின்றன.

இம்மூன்றாம்பகுதிக்கட்படும் அறிவு உலகில் மக்களையும் பிறபொருள்களையும் கண்டும் பழகியும் உணர்ந்தும் பெறப்படுதலால், இதனை வாழ்க்கையறிவு என்றல் பொருந்துவதாம். இது

* "It has been said that our knowledge is this; that we know best, first, what we have divined by native instinct; second, what we have learned by experience of men and things; third, what we have learned not in books. But by books–that is, by the reflections that they suggest; fourth, last and lowest what we have learned in books or with masters. The virtue of an aphorism comes under the third of these heads; it conveys a portion of a truth with such point as to set us thinking on what remains."—J. Morley.

ஒருவன் நல்வாழ்க்கைக்குத் துணைசெய்யும் அறிவுப்பொருள் நிறைந்த மொழியாம். ஒருவன் கற்பதும், கற்றாரோடுபழகுவதும் எல்லாம் உலகில் நல்வாழ்வு நடாத்தி நலம்பெறுதற் பொருட்டேயாம். ஆகவே, அவன்கற்கும் நூல்களுள் இப்பொருண்மொழிகள் இடம்பெறுவாயின், அவையும் அவற்றைப் படிக்குங்காற் கழிந்த பொழுதும் பயன்படாதொழிவனவேயாகும். ஆகவே, இப்பொருண்மொழி ஒவ்வொரு நூலினும் அமைதல் இன்றியமையாதாம்.

நாம்வாழும் இக்காலமும், நம்மனப்பான்மையும் புதியவுணர்ச்சியும் ஒழுக்கமும் கொண்ட முன்னேற்றமென்னும் பொருளால் இழுக்கப்பெறுகின்றன. "ஒருஊரின்கண் ஒரு அரசன் இருந்தான்" என்று தொடங்கும் சுவடிகள்மறைகின்றன; இன்னயாண்டில் இத்திங்களில் இந்நாளில் இந்நிகழ்ச்சி" நடைபெற்றதென்னும் முறை எழுந்துநிலவுகின்றது. எப்பொருளைக் கேட்பினும், எப்பொருளைக்கற்பினும், அப்பொருளைக் கேட்டவாறே, கற்றவாறே உணர்தலின்றிப் பலவகையினும் ஆராய்வதும், முடிபுகூறுதலுமே எங்கும் விளங்கித்தோன்றுகின்றன. இங்ஙனமே நம்பண்டைவரலாறும், அறிதல்வேண்டுமென்னும் அவா நாகரிகமும் எங்கும் எல்லோருடையமனத்திலும் எழுந்துலவுதலைக் காண்கின்றோம். இவ்வுணர்ச்சி மிக்குஎழும் இக்காலத்தில்,—பண்டைவரலாற்றாராய்ச்சியும், பொருளியல்புணர்ச்சியும், அரசியல்கிளர்ச்சியும் விரவிச்செல்லும்இக்காலத்தில்,—மக்களியல்பையும் ஆராய்தல் வேண்டுமென்பது கூறாமலேயமையும். மக்களியல்பு பொருண்மொழிக்கண் அடங்கியிருத்தலால், அவ்வாராய்ச்சி பொருண்மொழியாராய்ச்சியே யாயிற்று. இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் பொருண்மொழிகளைக் கூறவல்லவர் ஒருவர் வேண்டுமன்றே. அவர்யார்? அவரேநம்புலவர்பெருமக்கள். அவரே, உலகில் நாம்வாழ்வினியல்பை யுள்ளவாறே யுரைக்கும் ஆற்றல் படைத்தவராவர்; சிலஉண்மைகளையும் மெய்ம்மைகளையும் எடுத்துரைக்கும் சிலரினும், இவர்கள் போற்றற்குரியர். புலவர்களின் செயல் நிலைவனப்பும் தூய்மையும் நிறைந்தது. சரித்திரங்

கூறுதல், ஒழுக்கநெறியமைத்தல், அரசியலாராய்தல், சொற்பொழிவுசெய்தல் ஆகிய இவையாவும் ஒருவனது உலகியலறிவின் திட்பநுட்பத்துக்கேற்ப வமைந்தனவாம். ஒழுக்கநெறியும், சரித்திரமுறையும், அரசியல்வாதமும், அவர்தம் கல்வி, கடைப்பிடி முதலியவற்றிற்கேற்ப மக்களால் மதிக்கப்படுவனவாம். மற்று, எளியதாய உரைநூல் எழுதும் ஒருவன், ஒன்றிரண்டாய பொருண்மொழிகளைத் தன்னூலிடையே தொடுப்பனேல் அவன் முனிவரையொப்பக் கருதப்படுகின்றான். இதுவே அப்பொருள் கட்கும் இதற்குமுள்ளவேறுபாடு.

"தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந் துணர்க என்ப மாதோ" (நற்.1 16) என்றும்,

"நெடிய மொழிய கடிய வூர்தலும்
செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர்
புன்க ணஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வமென் பதுவே"
(நற். 210) என்றும்,

"தீயும் வளியும் விசும்பு பயந்தாங்கு
நோயும் இன்பமும் ஆகின்று மாதோ" (நற். 294) என்றும் வரும் பொருண்மொழிகளால், இவற்றை யாக்கிய பெரியோர்களும் நல்லிசைச் சான்றோர் வரிசையுள் இடம்பெறுவாராயினர். இத்தகைய பொருண்மொழிகள் இலவாயின், இராமாயணமும் சிந்தாமணியும் பிறவும் நின்றுநிலவுதல் யாங்ஙனம் அமையும்? மேனாட்டார் ப்ளூடார்க் (Plutarch) என்பவரை மிக மேம்படவுரைப்பது, கதைகூறுவதினும் மக்களையும் அவர்தம்பண்பினையும் வெளிப்படுத்துவதே சீரியகருத்தாய்க் கொண்டமையேயென்பர். இளங்கோவடிகள், "அரசியல் பிழைத்தோர்க் கறங் கூற் றாவதூஉம், உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம், சூழ்வினைச் சிலம்பு காரணமாகச், சிலப்பதி கார மென்னும் பெயரால், நாட்டுவதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" (சிலப்பதிகம்) என்று தொடங்கினமையும் இக்கருத்தே பற்றியென்க.

பொருண்மொழி யிடையிடை விரவிய நூல்கள் சிலவே ஆங்கிலநாட்டில் உள்ளனவென்றும், அவை எத்துணை மிகுதிப் படுகின்றனவோ அத்துணை ஒழுக்கமும் உயர்வும் மக்கட்குண் டாகுமென்றும், இவற்றில் முற்பட்டுவிளங்குவன நம்நாட்டு மொழிகளே யென்றும் ஜான்மார்லி என்பவர் 1887-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம்நாள் எடின்பர்க் என்ற நகரத்தில் செய்த சொற்பொழிவில் கூறியிருக்கின்றார். அவர் நாட்டில் ஒரு கிறித்தவ ஆசிரியர் சூதினால் தம்பொருளிழந்து, கடன் வாய்ப்பட்டு நீங்கும் ஆற்றலிலராய் அமெரிக்காவிற்கு ஓடிப் போய்மக்கட்கெனச் சிலபொருண்மொழி நிறைந்தநூலொன்றை "சிலசொல்லிற் பலபொருள்கள்" (Lacon or Many things in few words) என்ற பெயரிட்டு 1820-ஆம் ஆண்டில் வெளி யிட்டார் என்றும், அந்நூற்கண் உள்ளன பொருளுரையாகாது பொய்யுரை (உள்ளீடில்லாதஉரை, வெற்றுரை)யாக இருந்தமை கண்டு தாம் தீயிட்டெரித்துவிட்டாதாகவும் அவர் கூறுகின்றார்.

பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் பொருண்மொழி புணர்த்துக்கூறல் தமக்கு அணியாகக் கொண்டிருத்தல் வேண்டு மாயினும் அவை பெரும்பான்மையும் மக்கட்குவேண்டும் பொது வுண்மைகளேயே புணர்த்துகின்றன.

"இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர்" (அகம்-66.) என்றும்,

"அறந்தலைப் பிரியா தொழுகலும் சிறந்த
கேளிர் கேடுபல வூன்றலும் நாளும்
வருந்தா வுள்ளமோ டிருந்தோர்க் கில்லெனச்
செய்வினை புரிந்த நெஞ்சினர்" (அகம்-173) என்றும்,

"நெறியி னீங்கியோர் நீரல கூறினும்
அறியா மையென் றறியல் வேண்டும்" (சிலப்-10) என்றும்

"Plutarch's aim was much less to tell a story than as he says 'to decipher the man and his nature'"—Studies in Literature. p. 66.

"நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின் அதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே" (புறம்-195) என்றும்

"செல்வத்துப் பயனே யீதல்,
துய்ப்பேம் எனினே தப்புந பலவே" என்றும்

வருவனவற்றாலறிக.

மக்கள் நாடோறும் இயற்றும் குற்றங்களையும் நலங்களையும் எடுத்துக்காட்டி அவற்றை நீக்குதலையும், போற்றுதலையும் செய்யும் பொருண்மொழிகள் நிறைந்த நூல்கள் வேண்டும். ஆங்கிலேயர்கள் மக்களின் ஒழுக்கங்களையும், அவர்செய்யும் பிழைகளையும் இன்னோரன்ன பிறவற்றையும் எடுத்துக்காட்டும் பொருண்மொழிகளைப் புணர்த்தற்கு நாவல்களையே கருவியாகக் கொண்டிருக்கின்றனர். இவை பெரும்பான்மையும் எளிய நடையில் வழுவில்லாத இனிய தீஞ்சொற்களாலாக்கப்பட்டுப் பேரிலக்கியங்கட்குள்ள அமைதி நிரம்பிமிளிர்கின்றன. நம் நாட்டில் அம்முறையைக் கையாடல்வேண்டிச் சிலர்சிலநாவல்கள் எழுதுகின்றனர். அவற்றுட் பெரும்பான்மைய மக்களின் ஒழுக்கக்கேடுணர்த்தும் பொருண்மொழி புணர்த்தலில் அமைந்தனவாயினும், அம்மொழிகட்குரிய சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமுமின்றி, வழுவெல்லாம் நிறைந்து உலவுகின்றன. "**முருகன்**" என்னும் நாவலொன்று இவ்வாண்டில் சென்னைச் 'சர்வகலாசாலை இன்ட்டர்மீடியேட்' வகுப்பிற்குப் பாடமாக அமைந்துள்ளது. அதன்கண் மக்கள் வாழ்வுபெறுவதும், நடைப் பிறழ்ச்சியால் கேட்டிற்குள்ளாகி வருந்துதலும், உழவு தொழிற்கு வேண்டும் பொருண் மொழிகளும் நிறைந்திருக்கின்றன. மற்று, அதன் சொன்னடை மிகத்தாழ்ந்தநிலையில் உளது. நூலெழுதப்புகுவோர் எம்மொழியில் எழுதவிரும்புகின்றனரோ அம்மொழியில் இயன்றவாறு பிழையின்றிவிளங்க எழுதுதல்வேண்டும். சொற்றொடர்களில் இலக்கணவழுக்கள் அமைந்திருத்தல் ஒருபுடை நிற்ப, "**ஒருவள்**" முதலிய இலக்கண வரம்புகடந்த சொற்கள் பல விரவியிருத்தல்

கற்பார்க்குக் கேடுபயக்கும் தன்மையதாகின்றது. நிற்க, உரை நூல்களிற் காணப்பெறும் பொருண்மொழிகள் எண்ணிறந்தனவாகலால் ஒருசில கூறி இக்கட்டுரையினை முடிக்கின்றேன்.

“ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகாது. புத்தகஞானமே யுடையவர்வர்கள் விடயங்களை யாராயும் போது தமது சொந்த நிலையையிழந்து அப்புத்தகநிலையையே பெற்று ஆராய்வார்கள். ஒரு தேசத்தின் இயல்பினை அத் தேசத்திற்குச் சென்று திரும்பினோர் கூறக்கேட்டஅறிவு எவ்வாறுவலியுடையதாகுமோ அவ்வளவுவலியே புத்தகஞானமே யுடையோன் ஆராய்ச்சியிற்படும் பொருளுமாகும். புத்தகமேகற்றோன் காணும்விஷயம் பல்லிழந்தோன் தன் வாயிலமைத்துக் கொள்ளும் போலிப் பல்லைப்போல் மனதிற்பதிகிறது. தாமே தம்சொந்தஅறிவினால் அறிந்தவிஷயம் இயல்பாகவேயமைந்த அவயவம்போல் மனதில் வலுப்பட்டுநிற்கிறது”—தி. செல்வக்கேசவராய முதலியார். M. A.

“காமுகனுவானொருவன் ஒருவனிதையிடத்து அன்புடையன் என்பது அவள் ஒக்கலைக் கண்டுழி நிகழும் அன்பின் அளவுபற்றியே அறியப்படும்.”—சிவஞானயோகிகள்.

“மானமாவது தன்னிலைமையிற் றாழாமையும், தெய்வத்தாற் றாழ்வுவந்துழி உயிர்வாழாமையுமாம்.”

“உயிர் நிலத்து வினைவித்திட்டார்க்கு விளைவும் அதுவே.—பரிமேலழகர். சில ஆங்லகிப் பொருண்மொழிகள் :—

1. நுண்ணறிவோர் இழைக்கும் தவறுகளும், அறிஞர்செய்யும் ஆரவாரமும், நல்லோர் பிழைக்கும் குற்றங்களும் ஆகிய இவையாவும் சேரநிகழ்வது கிளர்ச்சியே.

Follies committed by the sensible, extravagances uttered by the clever, crimes perpetrated by the good, there is what makes revolution.

2. மக்களின் மடமைநோக்கி மிக்க சினங்கொள்ளுதல் மடமெனப்பட்ட யாவையும் ஒருங்கே யழைத்துக்கொள்ளும் செயல்களுள் மிக்கதொன்றாம்.

Excessive anger against human stupidity is itself one of the most provoking of all forms of stupidity.

3. இன்பமன்றுஅறிஞர் வேண்டுவது; துன்பத்தினீக்கமே. அவர் தேடிச்செல்வதும் அதனையேயாம்.

Not pleasure but freedom from pain is what the sensible man goes after.

4. தனக்கு முன்னிருந்தோன் ஒருவற்கு ஒப்பாகக் கருதின், அவனின் இரட்டித்த ஆற்றலுடையனாதல் வேண்டும்.

To equal a predecessor one must have twice his worth.

5. செய்தற் கெளியதாயினும் ஒன்றைச் செய்தலுறுபவன், அதனை அரிதென்றும், அரியதாயின் எளிதென்றும் கருதிப்புகுதல் வேண்டும்.

What is easy ought to be entered upon as though it were difficult, and what is difficult as though it were easy.

இதுகாறும் கூறியவாற்றால், பொருண்மொழியென்பது தமிழ்நூல்களில் பொருண்மொழிக்காஞ்சியென்னும் துறைப் பகுதியுள் அடங்குவதென்பதும், அது சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் பெற்று நூல்கட்கு அணியாதலேயன்றித் தொழில்முட்டறுக்கும் கருவியாமென்பதும், பொருண்மொழிகட்கு ஆங்கிலேயர்கூறும் இலக்கணம் இதுவென்பதும், ஒருவன் கற்றற்குரிய பொருள்களுள் இவற்றைக் கற்றல் அவன் வாழ்க்கைச் சாகாடுகைத்தற்கண் இன்றியமையாது வேண்டப்படுமென்பதனால், இவை மக்கள் வாழ்விற்கென வமைந்த விதிகளாம் என்பதும், அறிவாவது இஃதென்பதும், அது நால்வகைப் பாகுபாடுபெறும் என்பதும், அப்பாகுபாட்டின்கண் பொருண்மொழியாலெய்தும் அறிவு மூன்றாம் பாகுபாட்டிலடங்குமென்பதும், இம்மொழிகள் மக்களின் மனப்பான்மையையுள்ளவாறு காட்டும் இயல்பின என்பதும், ஆராய்ச்சியே பொருளாகச் செல்லும் இக்காலத்தில் பொருண்மொழிகளைக் கற்று மக்களின் மனப்பண்பாராய்தலும் வேண்டுமென்பதும், மனப்பண்பு கண்டு உணர்ந்து கூறும்பொருண்மொழி யாட்சியால் ஒருவன் நன்கு மதிக்கப்பெறுவன் என்பதும், நம்நாட்டு இலக்கியங்கள் மக்களின் பொதுவாய பண்பினை யுணர்த்துகின்றனவென்பதும், இக்கால

உரை நூல்களிற் சில, மக்களின் சிறப்புப் பண்பினையுணர்த்தினும் வழுமலிந்துள்ளனவென்பதும், ஏனையுரை நூல்களிற் சில பொருண்மொழிகள் இவற்றையும் உணர்த்துகின்றனவென்பதும் பிறவும் கூறப்பட்டனவாம்.

சைவமும் தமிழிலக்கியமும்.

திரு. வை. சுந்தரேச வாண்டையாரவர்கள்,
ஆசிரியர், திருவையாறு.

ஒரு நாட்டினரின் பழக்க வழக்கங்களையும் அவர்கள் உள்ளத்துக்கிடந்த சிறந்த கொள்கைகளையும் தெள்ளிதிற் புலப்படுத்தவல்லன அவர்கள் தாய்மொழியானியன்ற சிறந்த இலக்கியங்களேயாம். கால நிலைக்கு ஏற்ப மக்களின் நோக்கங்களும் பழக்க வழக்கங்களும் மாறுபடுவது இயல்பே. அத்தகைய மாறுபாடுகளைப் பிற்காலத்தார் உள்ளபடி உணர்ந்து கொள்வதற்கு உதவியாயிருப்பதும் சிறந்த இலக்கியங்களே.

ஒரு காலத்திருந்த மக்களின் உள்ளம் எதன்மாட்டு ஆர்வங் கொண்டிருந்தது என்பதை அக்காலத்திருந்த நல்லிசைப் புலவர்கள் இயற்றிய நூல்களாலேயே உணரலாம் என்பது இலக்கிய வரலாறு உணர்ந்தவர்களுக்குத் தெள்ளிதிற்றெரியக் கூடியதாம்.

ஒவ்வொரு காலத்தெழுந்த நூல்கள் பெரும்பாலும் ஒரே வகையான உட்கிடையமைந்திருக்கின்றன. நம் செந்தமிழ் நாட்டில் சங்க காலத்தினும் அதற்கு முற்பட்ட காலத்தினும் இயன்ற சிறந்த இலக்கியங்களின் உட்கிடை பெரும்பாலும் அகப்பொருட் டிறமும் புறப்பொருட் டிறமுமேயாம். புறப்பொருட் சுவையினும் அகப்பொருட் சுவையே மக்களது

உள்ளத்தைக்கவர்ந்தது என்பதற்குச் சங்கத்தொகை நூற்களில் அகப்பொருள் இலக்கியங்கள் மிக்கிருப்பதாலேயே நன்கு உணரலாகும்.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தோ ரேத்துங் கலியே அகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை" என்று

எண்ணப்பட்ட பழைய தொகை நூல்கள் எட்டில் புறம் பதிற்றுப்பத்து ஒழிந்த ஏனைய நூல்கள் இவ்வகத்திணைபற்றி அமைந்தனவேயாம். கடைச்சங்க நாளில் ஒருகாலத்தே பொருளிலக்கணமறிந்த புலவர் கிடையாமற் பாண்டியன் புடைபடக்கவன்றபோது "என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமே எனின் இவைபெற்றும் பெற்றிலேம்" என அவ்வரசன் கூறினனென்றும், அக்காலத்தே இறையனாரே முன் நின்று அவன் கவற்சி நீங்க அகப்பொருள் இலக்கணம் ஒன்றை அருளிச்செய்ய, அதற்குப் புலவரைக்கொண்டு அவன் பொருள் கண்டனனென்றும் கேட்கப்படும் செய்தி அக்காலத்து அகப்பொருளாராய்ச்சியில் மக்களுக்கிருந்த ஊக்க மிகுதியைப் புலப்படுத்தும்.

கடைச் சங்கத்து இறுதியிலிருந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் காலமுதல், அவர் இயற்றிய திருக்குறளைப் பின்பற்றி அறம் பொருள் இன்பங்களை ஒருங்கேயமைத்து (அறத்துப்பாலையும் பொருட்பாலையும் பெருக்கி) நூலியற்றுவதே புலவர்களியல்பாயிருந்திருக்கலாம். இதனைப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிற் பெரும்பான்மையானவை யத்தகையனவாய் இருப்பதே வலியுறுத்தும்.

சங்ககாலத்து இறுதிதொடங்கி நாயன்மார்கள் ஆழ்வார்கள் காலம்வரை, தமிழ்நாட்டில் பௌத்த சமண சமயக்கொள்கைகள் பரவி மக்கள் உள்ளம் அவற்றிடை யூறிக்கிடந்தமை

யால் அச்சமயங்களின் கொள்கைகளை உட்கிடையாகக்கொண்ட இலக்கியங்கள் பலதோன்றலாயின.

அதன்பின்னர் முறையே சைவ வைணவ சமயச் சார்பான தேவாரம் திவ்யப்பிரபந்தம் முதலிய புகழ்ப் பாக்களும், தலபுராணங்களும் பிறவும் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றின. இங்ஙனம் காலந்தோறும் மக்கள் கருத்தும் அதற்கேற்பத் தமிழ் இலக்கியங்களின் உட்கிடையும் மாறுதலடையினும் சிலசிறந்த கொள்கைகளும் வழக்கங்களும் மாறுதலுடையாமல் தொன்றுதொட்டு இன்றுவரை நிலவுகின்றன. சைவசமயக் கொள்கையும் சிவவழிபாடும் அத்தகையனவே.

ஆதியிற்றமிழ்நூல் அகத்தியற்கு மாதொருபாகர் உணர்த்தினரென்றும், பின்னர் குன்றமெறிந்த குமரவேள்பால் அக்குறுமுனிவர் தமிழ்உணர்ந்தார் என்றும், மேற்கூறிய திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும் தலைச்சங்கத்திருந்து, தமிழாராய்ந்தனரென்றும் வரலாறுகள் கேட்கப்படுவதிலிருந்தே தமிழுக்கும் தமிழ்த் தெய்வமாகிய சிவத்துக்கும் சிவனருள் சமயமாகிய சைவத்துக்கும் உள்ள தொடர்பு கால வரம்புக்குட் படாததெனல் தெரியவருகிறது. சிவனருளால் செந்தமிழுணர்ந்த தென்பொதிய முனிவரின் சீர்சால்மாணவராகிய தொல்காப்பியனார் இயற்றிய இலக்கணந்தான் இக்காலத்துள்ள தமிழ் நூல்களிற் காலத்தாற் முந்தியதெனத் தமிழறிஞர் பலரும் கூறுவர். அவ்வரும்பெரும் இலக்கணநூலுள்ளும் குறிப்பாகப் பல சைவநூற் கருத்துக்கள் அமைந்துள்ளவை அறிஞர்க்குப் புலனாகும்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" என்பது முதலிய தொடர்கள் சைவநூற் சார்பினவே.

இப்போது காணப்படும் சங்க இலக்கியங்களிலும் ஆங்காங்கு "ஆலமர் செல்வன்" "முக்கட்செல்வன்" பிறவாயாக்கைப் பெரியோன்" முதலியவாய்ச் சிவபெருமான் திருப்பேர்கள்

பேசப்படுதலாலும், சங்க நூற்களுக்குப் பின் எழுந்த சமண நூல்களிலும் "போகமார்த்த புண்ணியன்" என்பது போலப் பலபெயர்களால் சிவபெருமான் பேசப்படுதலாலும், சிவனது பெருமையும் அவனது வழிபாடும் நம்நாட்டில் இடையறாது மக்களால் போற்றப் பட்டு வந்தது தெளியப்படும்.

பௌத்த சமண சமய இலக்கியங்களுக்குச் சற்று முன்னே பின்னே சைவசமய ஆசிரியர்களாகிய நால்வர் தோன்றிச் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்தனர்.

அவர்கள் காலத்துக்குப் பின் எழுந்த தமிழ்த் தலபுராணங் களும் பெரும்பான்மை சைவத்தை விளக்கத் தோன்றியவையே.

அருண்மொழித் தேவராம் தெருண்மிகு பெரியா ரருளிய திருத்தொண்டர் புராணமோ வெனின், சைவத்துக்கோர் கண்ணும் தமிழுக்கோருயிருமாயுள்ளது.

சைவ சந்தான ஆசிரியன்மார்கள் அருளிய சித்தாந்த நூல்களனைத்தும் அத்தகையனவே. சிறுகாப்பியங்கள் (பிரபந்தங்கள்) தோன்றிய காலத்திலும் சைவச் சார்பான சிறு காப்பியங்களே மிகுதியாகத் தோன்றலாயின. அம்முறையில் தமிழும் சைவமும் வளர்த்த பெரியார்கள் பலருள் குமரகுருபரமுனிவர், சிவப்பிரகாசமுனிவர், மாதவச் சிவஞானமுனிவர் முதலியோர் மிகச் சிறந்தோராவர்.

இந் நாள் வரையும் உள்ள சிறந்த தமிழ் இலக்கியங்களெல்லாம் வகுத்துப்பார்ப்பின் சைவச் சார்புடையன மிக்கிருக்குமென்பது தடையின்றி ஏற்றுக் கொள்ளத் தக்க துணிபேயாம்.

தமிழும் சைவமும் நம் நாட்டுக்கு உடலும் உயிரும் போன்று ஒன்றையொன்று இன்றியமையாதவையாயிருக்கின்றன.

தண்டமிழ்ப் பயிர் ஓம்பிச் சைவப் பெரும் போகத்தை நுகர்வது தமிழ்மக்கள் தனிக்கடமையாகும். தமிழரே எழுமின்! சைவரே வம்மின்! இறைவரே திருவருள் செய்வீராக!